Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tmi12n062026.04
Vol. 12, No. 06 (2026) 12 06 2026 31–35 TIRJTS-2026-0010

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

திருமங்கையாழ்வாரின் திருவெழுகூற்றிருக்கை

Thirumangai Alvar's Thiruvezhukootrirukkai

முனைவர் ப. தீபா[1,*]

[1] தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர் திருச்சி.

***Corresponding author:** முனைவர் ப. தீபா, Cdeepa3875@gmail.com

ORCID iD: முனைவர் ப. தீபா https://orcid.org/0009-0004-5015-4689

ARTICLE INFO

Article history
Received: 20 October 2026
Revised: 22 October 2026
Accepted: 23 October 2026

Article ID
TIRJTS-2026-0010

Peer review
Double-blind peer review

Keywords
Thirumangai Azhwar
Thiruvezhukootrirukkai
Literary Structure
Chithirakkavi
Rathabandham

ABSTRACT

This research article examines the literary structure and special features of Thiruvezhukootrirukkai composed by Thirumangai Azhwar. Thiruvezhukootrirukkai is a unique literary form in which numerical words are arranged in an ascending and descending order from one to seven. This literary structure can be found in Sangam literature as well as Bhakti literature. Thirumangai Azhwar is renowned for his excellence in different forms of poetry. His Thiruvezhukootrirukkai is recognized as Chithirakkavi and Rathabandham. The structure of this work consists of two parts, namely the upper section and the lower section. It also holds a significant place in temple worship traditions. Later poets followed this literary technique and created various forms of literature. Thus, Thirumangai Azhwar's Thiruvezhukootrirukkai has made a valuable contribution to the growth and development of Tamil literature.

How to cite this article: முனைவர் ப. தீபா (2026). திருமங்கையாழ்வாரின் திருவெழுகூற்றிருக்கை. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 31–41. https://doi.org/10.63300/tmi12n062026.04

Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வு நோக்கம்

திருமங்கை ஆழ்வார் அருளிய திருவெழுகூற்றிருக்கையின் இலக்கியச் சிறப்புகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். இந்நூலில் இடம்பெறும் எண் அமைப்பு, எண்ணுப் பெயர்களின் பயன்பாடு, ஏறியும் இறங்கியும் வரும் பாடல் அமைப்பு ஆகியவற்றை ஆராய்தல், சித்திரக்கவி மற்றும் இரதபந்தம் என்னும் இலக்கிய நுட்பங்களை விளக்குதல், பக்தி இலக்கியத்தில்

திருவெழுகூற்றிருக்கையின் தனித்துவத்தையும் அதன் இலக்கியப் பங்களிப்பையும் வெளிப்படுத்துதல் ஆகியவை இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

ஆய்வு சுருக்கம்

இவ்வாய்வுக் கட்டுரை திருமங்கை ஆழ்வார் அருளிய திருவெழுகூற்றிருக்கையின் இலக்கிய அமைப்பையும் அதன் சிறப்புகளையும் ஆராய்கிறது. எண் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்று முதல் ஏழு வரை ஏறியும் இறங்கியும் அமைக்கப்படும் பாடல் முறையே எழுகூற்றிருக்கை எனப்படுகிறது. இவ்வகை இலக்கிய அமைப்பு சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் காணப்படுகிறது. திருமங்கை ஆழ்வார் நால்வகைக் கவித்திறன்களில் சிறந்தவராகப் போற்றப்படுகிறார். அவருடைய திருவெழுகூற்றிருக்கை சித்திரக்கவி என்றும் இரதபந்தம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது. இந்நூலின் அமைப்பு, மேல்பாகம் மற்றும் கீழ்ப்பாகம் என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. மேலும், கோயில் வழிபாட்டு மரபிலும் இந்நூல் சிறப்பிடம் பெற்றுள்ளது. பிற்காலத்தில் பல புலவர்களும் இவ்வகை இலக்கிய முறையைப் பின்பற்றி எழுகூற்றிருக்கை உள்ளிட்ட பல இலக்கிய வடிவங்களைப் படைத்துள்ளனர். இதன் மூலம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் திருமங்கை ஆழ்வாரின் பங்களிப்பு சிறப்பாக விளங்குகிறது

முன்னுரை:

திருமங்கையாழ்வார் சோழநாட்டுத் திருமங்கைநாட்டில் திருக்குறையலூர் எனும் ஊரினர். நீலன் என்னும் படைத்தலைவனின் மகனாகப் பிறந்து குறுநிலமன்னனாக வாழ்ந்து, தன் மனைவியின் சொல் கேட்டு வைணவ அடியாருக்கு அமுது படைத்து திருமாலின் அருளைப் பெற்றவர். இவர் பெரியதிருமொழி, திருகுறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் போன்ற இலக்கியவகைகளில் பாசுரங்களைப் பாடியுள்ளார். இவ்வாய்வு கட்டுரையில் திருவெழுகூற்றிருக்கை பற்றி காண்போம்.

எழுகூற்றிருக்கை

ஆசிரியப்பாவில் ‘ஒன்று’ என்னும் எண்ணுப் பெயரில் தொடங்கி, ஒன்று முதலாக ஏழிறுதியாக ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம் பாடப்பாடுவது எழுகூற்றிருக்கையாகும்.

எண்ணுப்பெயர்களின் அடியாகத் தோன்றி ஒர் எண்ணலங்காரமாக இவ்விலக்கியவகை வளர்ந்து நிற்கிறது. இவ்விலக்கிய அமைப்பை,

> “ஒன்று புரிந்த தடங்கிய இருபிறப்பாளர்
>
> முத்தீப் புரைய”(1)

என்று புறநானூறிலும்,

மூன்று வகைக் குறித்தமுத்தீச் செல்வத்து

இருபிறப்பாளர் - (2)

என்று திருமுருகாற்றுப்படையிலும் காணலாம்.

இவ்வாறு எண்ணுப்பெயர்களை நயம்பட அடுக்கியும், ஏற்றியும் இறக்கியும் கூறும் போக்குதொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

“ஒன்றினில் போற்றிய விசும்பும் நீயே

இரண்டின் உணரும் வளியும் நீயே

மூன்றின் உணரும் தீயும் நீயே

நான்கின் உணரும் நீரும் நீயே

ஐந்துடன் முற்றியநிலனும் நீயே”(3)

என்று ஒருபரிபாடல், ஒன்று முதல் ஐந்துஎண்களை ஏறுமுகமாக அடுக்கிக் கூறுகின்றது. இவ்வழியைப் பின்பற்றி பிற்கால புலவர்களும் தொடங்கினர்.

பக்தி இலக்கியங்களில் எழுகூற்றிருக்கை

தி;ருமங்கையாழ்வார் பாடிய திருவெழுகூற்றிருக்கை திருஞானசம்பந்தரின் முதல் திருமுறையில் பாடிய திருவெழுகூற்றிருக்கை,நக்கீரதேவநாயனார் பாடிய திருவெழுகூற்றிருக்கை ஆகியவையாகும்.

திருமங்கையாழ்வார் திருவெழுகூற்றிருக்கை தவிர பிறபாசுரங்களிலும் இம்முறையைக் கையாண்டுள்ளார்.

“பண்டாயவேதங்கள் நான்கும் ஐந்து

வேள்விகளும் கேள்வியோடு அங்கம் ஆறும்

கண்டானைத் தொண்டனேன் கண்டுகொண்டேன்”(4)

என்றும்

“முறையால் வளர்க்கின்றமுத்தியர் நால்வேதர்

ஐவேள்வி ஆறங்கள் ஏழினிசையோர்”(5)

என்றும் பெரியதிருமொழிபாசுரங்களில் பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார் - நாற்கவிப் பெருமாள்

வடமொழி கவிதைகளை ஆசு,மதுரம்,வித்தாரம்,சித்திரம் எனக்கூறும் மரபு உண்டு.

நாற்கவிகள்

ஆசுகவி-கொடுத்தபொருளை அடுத்தபொழுதிலேயே பாடுபவன்

மதுரகவி-இனிமை பெருகப் பாடுபவன்

சித்திரக்கவி-சித்திரத்தில் அமைப்பதற்கு ஏற்ப பாடுபவன் இவனுக்கு

மிறைகவி என்ற பெயரும் உண்டு.

வித்தாரக்கவி - ஒருபொருள் குறித்து மிகுதியாகப் பாடுபவன்

ஆதலால் குருபரம்பரை திருமங்கையாழ்வாரை நாற்கவி வல்லவராகக் கொண்டு நாலுகவிப் பெருமாள் என்கின்றனர். அவர் பாடிய பெரியதிருமொழி, திருத்தாண்டகங்கள் ஆகியவற்றில் ஆசுகவி,மதுரகவி இரண்டின் தன்மையும்,திருமடல்;களில் வித்தாரக்கவியின் இயல்பும்,எழுகூற்றிருக்கையில் சித்திரக்கவி தன்மையும் வெளிப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

சித்திரகவி என்பது சித்திரத்தில் அடக்கிக்காட்டவேண்டும் என்பதில்லை. மனத்தைப் பிணிக்கும் சொல் சித்திரமாக உள்ள கவிதையே என்பர். வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இவற்றுள் ஓரின எழுத்துகளால் வரும் பாட்டுக்களையும் சித்திரகவியாக இலக்கண நூல்கள் ஏற்கின்றன.

இக்காரணங்களாலேயே திருமங்கையாழ்வாரின் திருவெழு கூற்றிருக்கையைச் சித்திரகவி என்றும், இரதபந்தம் என்றும் வகைப்படுத்தினர்.

இரதபந்தத்தில் - எழுகூற்றிருக்கை

காலப்போக்கில் வைணவர்கள் திருமங்கையாழ்வார் எழுகூற்றிருக்கையை இரதபந்தமாகச் சித்தரிப்பதை ஏற்றுக் கொண்டனர். இதற்குப் பலசான்றுகள் உள்ளன. இந்நூல் கும்பகோணம் சாரங்கபாணிகோயிலில் தேர்வடிவில் பளிங்குக் கல்லில் வடித்து அமைக்கப்பட்டுள்ளது. நூல்களில் மட்டுமின்றிக் கோவிலிலும் இவ்வங்கீகாரம் நவீனக் கல்வெட்டுச் சான்றுபோல் ஆகிவிட்டது. அன்றியும் கோயில் திருவிழாக்களில் தேரில் பெருமாள் புறப்பாட்டின்போது வடம் பிடிக்கும் முன்பு இத்திருவெழு கூற்றிருக்கையை இருமுறை சேவிப்பதும் நடைமுறையில் உள்ளது.

எனவே சித்திரகவியாக ஏற்கப்பட்ட எழுகூற்றிருக்கை இரத பந்தமாகச் சித்தரிக்கப்படும் விதத்தை பி.பஅண்ணங்கராசாரியார் தேரின் உருவம் தோன்றக் சட்டங்கள் இட்டு அவற்றில் எண் முறையே பாசுரங்களை அடக்கவேண்டும். தேரானது மேற்பாகம் என்றும், கீழ்ப்பாகம் என்றும் இரண்டு பாகங்களைக் கொண்டதாயிருக்கும். ஒவ்வொரு பாகத்திலும் ஏழு கூறுகள் இருக்கும். இவற்றில் முதற்கூறு3அறையும், இரண்டாம் கூறு5அறையும்,ஐந்தாம் கூறு11அறையும்,ஆறு,ஏழாம் கூறுகள்13அறையும் கொண்டமையும். இவ்வாறு

ஒவ்வொரு கூறும் ஒன்றற்கொன்று இரண்டறை மேற்படுமாறு அமைக்கப்படும். மேற்பாகம் தலையிலிருந்து கீழ்ப்பாகம் அடியிலிருந்தும் இக்கூறுகள் அமையும். திருமங்கையாழ்வாரின் திருவெழுகூற்றிருக்கை இவ்வாறு அமைந்ததே ஆகும்.

இவ்வாறு எண்கள் மட்டும் நிரம்பிய இத்தேர்தட்டில் எண்களோடு அவ்வெண்ணுப் பெயர்களுக்குரிய ஆழ்வாரின் பாசுரப் பகுதிகள் இரதபந்தமாக இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

பிற்காலத்தில் திருவெழுகூற்றிருக்கை

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள்34அடிகள் கொண்டதாகத் திருவல்லிகேணிப் பார்த்தசாரதிப் பெருமாள் மீது ஓர் எழுகூற்றிருக்கை பாடியுள்ளார். இது அருணகிரியார், ஆழ்வார்,திருஞானசம்பந்தர் நக்கீரதேவநாயனார் ஆகியோர் பாடிய எழுகூற்றிருக்கைகளிலிருந்து அமைப்புமுறையில் வேறுபட்டுள்ளது. இவ்வேற்றுமையை அறிஞர்கள் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர். இவ்வெழு கூற்றிருக்கை அடிப்படையில் வேறு சில இலக்கியவகைகளும் கிளைத்திருக்கின்றன. அவை பாம்பன் சுவாமிகள், தண்டபாணிசுவாமிகள் போன்றோர் பாடிய நாற்கூற்றிருக்கை, எண் கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை ஒருபஃது கூற்றிருக்கைகளாகும்.

நிறைவுரை

எண்ணுப்பெயர் தொணிக்குமாறு பாடல் புனைவதே எழுகூற்றிருக்கையின் நோக்கமாகும். அந்நோக்கம் எவ்வாறு வளர்ந்து விரிந்து இலக்கியவகை ஒன்றிலேயே பல புதிய பரிமானங்களைக் கண்டது என்பதற்குத் தமிழில் உள்ள எழுகூற்றிருக்கைகளே சான்றாகும். இவ்விலக்கியவகை வளர்ச்சிக்கும், புதியவகை தோன்றலுக்கும் திருமங்கையாழ்வாரின் திருவெழுகூற்றிருக்கைக்கும் பெரும் பங்கு உண்டு என்பது மிகையன்று!.

சான்றெண் பட்டியல்

References

புறநானூறு> பா.367
திருமுருகாற்றுப்படை> பா.181
பரிபாடல்> பா.3
நாலாயிரதிவ்யப்பிரபந்தம்> பா.1096
மேலது> பா.1221